இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இயேசு கூறியது: "உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்: ஆடுகளுக்கு வாயில் நானே. எனக்கு முன்பு வந்தவர் அனைவரும் திருடரும் கொள்ளையருமே. அவர்களுக்கு ஆடுகள் செவிசாய்க்கவில்லை. நானே வாயில். என் வழியாக நுழைவோருக்கு ஆபத்து இல்லை. அவர்கள் உள்ளே போவர்; வெளியே வருவர்; மேய்ச்சல் நிலத்தைக் கண்டுகொள்வர். திருடுவதற்கும் கொல்வதற்கும் அழிப்பதற்குமன்றித் திருடர் வேறெதற்கும் வருவதில்லை. (யோவான் 10:7-10)

# பல்சமய உரையாடலுக்கான திருஆட்சிப்பீடப் பேரவையின் விசாகத் தின வாழ்த்துச் செய்தி

அன்புள்ள புத்த சமய நண்பர்களே,

1 பல்சமய உரையாடலுக்கான திருஆட்சிப் பீடப் பேரவையின் சார்பாக, விசாகப் பெருநாளைக் கொண்டாடும் உங்களுக்கும் உலகெங்கிலும் உள்ள அனைத்து புத்த சமயச் சமூகத்தினருக்கும் எங்கள் மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். கடந்த இருபத்தி நான்கு ஆண்டுகளாக, திருஆட்சிப்பீடம் இந்த மகிழ்ச்சியான சந்தர்ப்பத்தில் சமயங்கிடையிலான உரையாடல் பேரவையின் வாயிலாக உங்களுக்கு வாழ்த்துகளை அனுப்பி வந்தது. இந்த ஆண்டு இந்த வழிமரபின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவைக் குறிப்பதால், உங்களைச் சார்ந்த பல்வேறு மரபுகளுடன் எங்கள் நட்பு மற்றும் ஒத்துழைப்பைப் புதுப்பிக்க விரும்புகிறோம்.

2. இந்த ஆண்டு, *"புத்த சமயத்தவரும் கிறிஸ்தவர்களும்: இரக்கம் மற்றும் சகோதரத்துவ பண்பாட்டை உருவாக்குதல்"* என்ற கருப்பொருளை உங்களுடன் இணைந்து சிந்திக்க விரும்புகிறோம். நம்முடைய ஆன்மீக தேடலிலும், புண்பட்ட மனிதகுலத்துக்கும் காயமடைந்த பூமிக்கும் நம்முடைய சாட்சியம் மற்றும் சேவையில் நாம் அந்தந்த சமய மரபுகள் கொண்ட இரக்கத்திற்கும் சகோதரத்துவத்திற்கும் கொடுக்கும் உயர் மதிப்பை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

3. உலக அமைதி மற்றும் ஒன்றித்து வாழ்வதற்கான மனித சகோதரத்துவம் குறித்த ஆவணம் இவ்வாறு கூறுகிறது: "சமயங்களின் உண்மையான போதனைகள் சமாதானத்தின் மதிப்புகளில் வேரூன்றி இருக்க நம்மை அழைக்கின்றன; நெருங்கிய புரிந்துணர்வு, மனித சகோதரத்துவம் மற்றும் இணக்கமான ஒன்றித்த வாழ்வு ஆகியவற்றின் மதிப்புகளைப் பாதுகாக்கக் கடந்த நவம்பரில் தாய்லாந்தில் உச்சநிலை புத்த தேசியத் தலைவரைச் சந்தித்த திருத்தந்தை பிரான்சிஸ், *"நாம் நல்ல" அக்கம் பக்கம் வீட்டாராக"* வளர்ந்து ஒன்றாக வாழ முடியும், இதனால் நமது சமயங்களைப் பின்பற்றுபவர்களிடையே புதியச் சேவைத் திட்டங்களை உருவாக்குவதோடு சகோதரத்துவத்தின் பாதையில் ஏழைகளுக்கும் மற்றும் நமது பொதுவான இல்லமான இந்த பூமிக்கும் சிறப்பாகச் சேவையாற்ற முடியும். மேலும், இந்த வழியில், இங்கேயும் உலகின் பிற பகுதிகளிலும் இரக்கம், சகோதரத்துவம் மற்றும் தொடர்புப் பண்பாட்டை உருவாக்குவதற்கு நாம் பங்காற்ற முடியும். *"(cf. Visitingthe Supreme புத்த தேசியத்தலைவர், பாங்காக், 21 நவம்பர் 2019).*

4. இந்த விசாகத் தினக் கொண்டாட்டமானது, இளவரசர் சித்தார்த்தர் தமது தலையை மழித்து, அவரது அரச உயர் நிலையைக் கைவிட்டதன் மூலம் ஞானத்தைத் தேடினார் என்பதை நினைவுகூரத் தூண்டுகிறது. அவர் அவரது பெனாரஸ் பட்டு ஆடைகளைக் களைந்து ஒரு துறவியின் எளிய அங்கியை ஏற்றார். அவரது உன்னதமான செயல் புனித பிரான்சிஸ் அசிசியாரை நமக்கு நினைவூட்டுகிறது: அவரும் தனது தலைமுடியை மழுக்கி, எளிய ஆடையை ஏற்றார். ஏனென்றால் *"தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பான"* (பிலி 2: 7) மற்றும் *"தலை சாய்க்க இடமில்லை"* (மத் 8:20) என்ற இயேசுவைப் பின்பற்ற விரும்பினார்.

இவர்களின் முன்மாதிரியும் இவர்களைப் பின்பற்றுபவர்களின் முன்மாதிரியும் உலகப் பற்றற்ற வாழ்வின் முக்கியத்துவத்தைக் கண்ணோக்க நம்மைத் தூண்டுகிறன. எனவே, இதன் வழி, மனித மற்றும் சுற்றுச்சூழல் துயரங்களைத் தணிக்க, இரக்கமும் சகோதரத்துவப் பண்பாட்டையும் வளர்ப்பதற்கு நாம் இன்னும் சுதந்திரமாகச் செயல்பட முடியும்..

5. இவ்வுலகில் எல்லாம் ஒன்றுக்கொன்று தொடர்புடையது. ஒருவருக்கொருவர் சார்ந்திருத்தல் என்பது, இரக்கம் மற்றும் சகோதரத்துவத்தின் கருப்பொருளுக்கு நம்மை மீண்டும் இட்டுச் செல்கிறது. உங்கள் நட்புக்கு நன்றி செலுத்தும் விதத்தில், இன்று உலகில் இரக்கத்தையும் சகோதரத்துவத்தையும் வளர்ப்பதில் நீங்களும் கிறிஸ்தவ நண்பர்களுடன் சேர்ந்து ஆதரவளிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

6. நமது உலகளாவிய ஒற்றுமையின் தொடர்ச்சியை உறுதிப்படுத்த, நமது ஒன்றித்தப் பயணத்திற்குச் சிறந்தக் கல்வி செயலாக்கம் தேவை என்று நாங்கள் நம்புகிறோம். இந்த நோக்கத்திற்காக, 2020 அக்டோபர் 15-ஆம் தேதி *"கல்விக்கான உலகளாவிய ஒப்பந்தத்தை மீண்டும் உருவாக்குதல்"* என்ற தலைப்பில் ஒரு உலகளாவிய நிகழ்வு நடைபெறவிருக்கிறது. "இந்தச் சந்திப்பு இளைஞர்களுக்காகவும், இளைஞர்களுடனும் நமது அர்ப்பணிப்பை மீண்டும் புதுப்பிப்பதோடு, ஆக்கபூர்வமான உரையாடல் மற்றும் ஆழமான புரிந்துணர்வை ஏற்படுத்தும் கல்விக்கான நமது ஆர்வத்தை புதுப்பிக்கும்" என எதிர்ப்பார்க்கிறோம். *(திருத்தந்தை பிரான்சிஸ், கல்வி தொடர்பான உலகளாவிய ஒப்பந்தத்தை தொடக்க நிகழ்வுக்கான செய்தி, 12 செப்டம்பர் 2019).*

ஒரு புதிய மனிதநேயத்தை வளர்ப்பதற்கு, தனித்தனியாகவும், நமது சமூகங்களுக்குள்ளும் இந்த முயற்சியை ஊக்குவிக்க அனைவருடனும் இணைந்து பணியாற்ற நாங்கள் உங்களை அழைக்கிறோம். புத்த சமயதுதவரும் கிறிஸ்தவரும் ஆழ்ந்த மதிப்பீடுகளைச் செயல்படுவத்துவதையும், உலகின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள சமூகக் சீர்க்கேடுகளை வேரோடு களைய ஒன்றிணைந்து செயல்படுவதையும் கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

7. கொரோனா வைரஸ் தொற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள அனைவருக்கும் மற்றும் பராமரிப்பாளர்களுக்காகவும் இறைவேண்டல் செய்வோம். இந்த நெருக்கடியான தருணத்தில் நம்பிக்கையுடனும், இரக்கத்துடனும், தாராள மனதுடனும் வாழ நமது மக்களை ஊக்குவிப்போம்.

8. அன்புள்ள புத்த சமய நண்பர்களே, இந்த நட்பு மற்றும் ஒத்துழைப்பின் மனப்பான்மையில், நீங்கள் மீண்டும் விசாகத் தினத்தை அமைதியான மற்றும் மகிழ்ச்சியான பெருவிழாவாகக் கொண்டாட வாழத்துகிறோம்.

Miguel மngel Card. AyusoGuixot, MCCJ
President
Msgr. Kodithuwakku K. Indunil J.

# கோவிட்-19-க்குப்பின் நீதி, பிறரன்பு, தோழமைக்கு அழைப்பு

**வத்திக்கான்**: கொரோனா கிருமி கொள்ளை நோயை கிறிஸ்துவின் உயிர்ப்பின் ஒளியில் நோக்குமாறு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஏப்ரல் 17, அன்று மீண்டும் அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

அனைத்தையும் புதியனவாக்கும் தூய ஆவியாரின் ஒன்றிப்பில், புதுப்பிக்கப்பட்ட ஒருமைப்பாட்டுணர்வுக்கு அழைப்பு விடுத்துள்ள திருத்தந்தை, நற்செய்தியால் மட்டுமே இயலக்கூடிய புதிய கற்பனையை ஊக்குவிப்பதற்கு இதுவே சரியான நேரம் என்று கூறியுள்ளார்.

நீடித்த மற்றும், விரிவான வளர்ச்சியைத் தேடுவதில் முழு மனித குடும்பத்தையும் ஒன்றிணைப்பதன் முக்கியத்துவத்தை மக்கள் உணருவதற்கும், கோவிட்-19 கொள்ளை நோய் உதவியுள்ளது என்றும், பல மக்களின் துன்பங்களுக்குப் புறமுதுகு காட்டி, இக்கால மற்றும், வருங்கால வரலாற்றை நம்மால் எழுத முடியாது என்றும், திருத்தந்தை கூறியுள்ளார்.

நமக்காகக் காத்திருக்கும் மற்ற கொள்ளை நோய்களின் முன்னிலையில் கூட, நாம் ஒரே மக்களாகச் செயல்பட்டால், உண்மையான தாக்கத்தைக் கொண்டிருக்கலாம் என்று கூறியுள்ள திருத்தந்தை, புறக்கணிப்பின் உலகளாவியத் தன்மைக்குத் திரும்பும் சோதனைகளை எதிர்கொள்கையில், நீதி, பிறரன்பு மற்றும், தோழமை ஆகிய நோய் எதிர்ப்பு சக்திகளை மனித சமுதாயம் வளர்க்கும் என்று, தான் நம்புவதாகவும் எடுத்துரைத்துள்ளார்.

உலகில் அனைவருக்கும் அளிப்பதற்கு உணவு உள்ளது என்பதை அறிந்திருந்தும், பலர் துன்புறும் பசிக்கு எதிராக நம்மால் பொறுப்புணர்வுடன் செயல்பட முடியுமா? என்ற கேள்வியை எழுப்பியுள்ள திருத்தந்தை, ஆதிக்க மற்றும் அதிகாரம் கொண்டவர்களின் ஆசைகளினால் தூண்டப்படும் போர்களின் முன்னர் நாம் தொடர்ந்து, மௌனம் காக்க உடந்தையாய் இருக்க முடியுமா? எனவும் கேட்டுள்ளார்.

பலரை ஏழ்மையில் ஆழ்த்தும் வாழ்வு முறையை மாற்றுவதற்கு நாம் விரும்புகிறோமா, வளங்களைச் சமமாகப் பகிர்ந்து கொள்ளக்கூடிய மிகவும் எளிய மனித வாழ்வு வாழ நம்மையே ஊக்கப்படுத்துவதற்கு விரும்புகிறோமா? உலகளாவிய சமுதாயமாக, சுற்றுச்சூழல் சீரழிவை கட்டுப்படுத்துவதற்கு, தேவையான முயற்சிகளை எடுப்போமா அல்லது தொடர்ந்து அதற்கு மறுப்புச் சொல்லிக்கொண்டே இருப்போமா? என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்.

*மேரி தெரேசா: வத்திக்கான் செய்திகள்*



# திருத்தந்தை திருஅவைக்கு எழுதிய திருமடலும் பரிந்துரை இறைவேண்டலும்

**திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அன்னை மரியாவின் வணக்க மாதமான மே மாதம் குறித்து இறைநம்பிக்கையாளர்களுக்கு எழுதிய திருமடல்.**

அன்பாரந்த சகோதர சகோதரிகளே!

மே மாதம் பிறந்துவிட்டது. இந்தக் ‘குடும்ப ஒன்றுகூடலை ஆன்மீக ரீதியில் வெகுவாகப் போற்றுகிறது.

இதன் காரணமாக, இந்த மே மாதத்தில் நம் இல்லங்களில் செபமாலை செபிப்பதன் அழகை ஒவ்வொருவரும் கண்டுணர்ந்திட நான் ஊக்கப்படுத்த விரும்புகிறேன்... இதை ஒரு குழுவாகவோ அல்லது



இக்காலத்தில் இறைமக்கள் இன்னும் ஆழமாக தங்களுடைய அன்பையும் பக்கிதியையும் அருள்மிகப் பெற்ற அன்னை கன்னி மரியாவுக்கு வெளிப்படுத்துவார்கள். இம்மாதத்தில் இல்லங்களில் குடும்பமாக செபமாலை செபிப்பது வழங்கம். பெருந்தொற்று நோயின் விளைவாக ஏற்படுத்தப்பட்டுள்ள நடமாட்டக் கட்டுப் பாடு, எல்லாவற்றிற்கும் மேலாக, தனிநபராகவோ நிறைவேற்ற முடியும். உங்கள் சொந்தச் சூழ்நிலைகளுக்கேற்ப, பெரும்பாலும் இந்த இரு சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திட நீங்கள் முடிவெடுக்கலாம். இதை மிக எளிய முறையில் செய்திடலாம். இணையத் தளத்தை மிக எளிதாகப் பயன்படுத்தியும், (ஆங்கிலத்தில், (http:/www.vatican.va/special/rosary/index_rosary.htm) பல்வேறு நல்ல மாதிரிபடிவங்களைப் பயன்படுத்தியும் இறைவேண்டல் செய்யலாம்.

அன்னை மரியாவிடம் செபிக்கப்படும் இரண்டு இறைவேண்டல்களை நான் தருகிறேன். நீங்கள் இவற்றை செபமாலையின் இறுதியில் சொல்லலாம். இவற்றை நானும் உங்கள் அனைவருடனும் ஆன்மீக ஒன்றிப்பில் இணைந்து இந்த வணக்க மாதமான மே மாதத்தில் செபிக்கவுள்ளேன். உங்கள் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் பொருட்டு இந்த மடலின் இறுதியில் அவற்றை உள்ளடக்கியுள்ளேன். அன்பார்ந்த சகோதரமே, நம் தாயான அன்னை மரியாவின் இதயத்துடன் கிறிஸ்துவின் திருமுகத்தை ஆழ்ந்து தியானிப்பது நம்மை இன்னும் மேலாக ஒரு ஆன்மீகக் குடும்பமாக மாற்றிடும்; இந்தத் துன்பக் காலத்தை வென்றெடுக்க நமக்கு உதவும்.

நான் உங்கள் அனைவரையும் குறிப்பாக மிக அதிகமான துன்புறுவோரையும் என் செபங்களில் கொண்டிருக்கிறேன். நீங்களும் தயவுசெய்து எனக்காகச் செபிக்கும்படி, வேண்டுகிறேன். நான் உங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பேரன்புடன் என்னுடைய ஆசீரைப் அளிக்கிறேன்.

திருத்தந்தை பிரான்சிஸ்.

### முதலாவது இறைவேண்டல்

‘மிகவும் இரக்கமுள்ள தாயே! உமது அடைக்கலமாக ஓடிவந்து, உம்முடைய தயைநிறை உதவிகளை இறைஞ்சி மன்றாடிக் கேட்ட ஒருவராகிலும் உம்மால் கைவிடப்பட்டதாக ஒருபோதும் உலகில் சொல்லக் கேள்விப்பட்டதில்லை என்று நினைத்தருளும்.

கன்னியருடைய அரசியே! கன்னிகையே! தயையுள்ள தாயே! இப்படிப்பட்ட நம்பிக்கையால் ஏவப்பட்டு உமது திருப்பாதத்தை அண்டி வந்திருக்கிறோம்.

பெருமூச்செறிந்து அழுது பாவிகளாயிருக்கிற நாங்கள் உமது தயவுக்குக் காத்து நிற்கின்றோம்.

மனுவுருவான வார்த்தையின் தாயே, எங்கள் மன்றாட்டைப் புறக்கணியாமல் இரக்கத்தோடு செவிசாயத்துத் தந்தருளும் தாயே ஆமென்

### இரண்டாவது இறைவேண்டல்

ஓ மரியே, மீட்பின் மற்றும் நம்பிக்கையின் அடையாளமாக, நீர் எப்போதும் எம் பாதையில் சுடர்விடுகின்றீர், நோயாளிகளின் நலவாழ்வை உம்மிடம் அர்ப்பணிக்கின்றோம்.

சிலுவையடியில் இயேசுவின் பாடுகளோடு உம்மை இணைத்துக்கொண்டீர், உமது விசுவாசத்தைக் காத்தீர், உரோம் மக்களின் மீட்பரின் தாயே, எமது தேவை என்னவென்று உமக்குத் தெரியும், இறையன்பு அன்னையே, எமக்கு உதவியருளும், சோதனை துன்ப வேளைகளில் எம் மன்றாட்டை புறக்கணியாதேயும், எம்மை எல்லாவித ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றும், மகிமையுள்ள கன்னியே, பேறுபெற்றவரே ஆமென்

### வாட்செப் (WhatsApp) வாயிலாகத் திருவிவிலியக் கல்வி



தமிழ்ப் பேசும் இறைமக்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்க முதன்முறையாக ‘வாட்செப்’ வாயிலாக திருவிவிலியக் கல்வி தமிழில் தொடங்கப்பட்டுள்ளது. மூன்று மறைமாவட்டங்களிலிருந்தும் பலர் இத்திட்டத்தில் பங்குகெடுக்கத் தொடங்கியுள்ளனர். இந்த திருவிவிலியக் கல்வித் திட்டத்தில் ஆர்வமுள்ளோர் கீழ்க்கண்ட சகோதரரோடு தொடர்புகொள்ள வேண்டுகிறோம்.

ஆர்.கே.சாமி 012 2285452

### 93 வயதை நிறைவு செய்துள்ள முன்னாள் திருத்தந்தை

**வத்திக்கான்**: ஏப்ரல் 16, கடந்த வியாழனன்று, தமது 93வது வயதை நிறைவு செய்துள்ள முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களுக்கு, தற்போது நிலவும் கொரோனா தொற்றுக்கிருமியின் தாக்கத் தால், எவ்வித விழாவும் இடம்பெறவில்லை என்றும், அவர் மக்களின் எண்ணங்களிலும், செபத்திலும் இருக்கிறார் என்பதே முக்கியம் என்றும் முன்னாள் திருத்தந்தையின் உதவியாளர், பேராயர் Georg Gயூnswein அவர்கள் கூறினார்.



*திருத்தந்தை பிரான்சிஸ், முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்*

## 'ஆண்டவரே நம் ஆயன்; நமக்கேதும் குறையில்லை'

இன்றைய தினத்தைத் திருஅவை நல்லாயன் ஞாயிறு எனக் கொண்டாடுகிறது. இயேசு நல்லாயனாகச் சித்தரிக்கபடுவதோடு அவரது மந்தைகள் நாம் என்பதும் நினைவூட்டப்படுகிறது. மேலும் இன்று 'அருள்பணி' மற்றும் இருபால் துறவறத்தாருக்கான இறையழைத்தல் ஞாயிறையும் நாம் நினைவுகூர்கிறோம்.

இன்றைய முதல் வாசகம் சென்ற வாரம் இடம்பெற்ற பேதுருவின் உரையிலிருந்தே எடுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இயேசுவின் உண்மையான முகத்தையும் அவர்களது சாட்சியத்தையும் அழகாக எடுத்துரைத்தவர், இப்போது மனமாற்றத்தைப் பற்றி வலியுறுத்துகிறார். அதாவது, இயேசு கிறிஸ்துதான் எதிர்ப்பார்க்கப்பட்ட மெசியாவும் இறைமகனுமாவார் என்பதை ஏற்பதுதான் அந்த மனமாற்றம். ஆனால் இன்றும் இந்த பேருண்மையை ஏற்பதில் தான் தடுமாற்றம் நிலவுகிறது.

இக்காலக்கட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள நடமாட்டக் கட்டுப்பாட்டினால் பலர் இல்லங்களில் முடங்கிக் கிடக்கும் வேளையில் இறைப்பற்றில் சற்று தளர்ச்சியடைந்துள்ளனர். அன்று பல அற்புதங்களைச் செய்த ஆண்டவர் ஏன் இன்று அவ்வாறு எதையும் நிகழ்த்தவில்லை என்று கேள்விகள் எழுப்புவோறும் உளர்.

மக்களின் அழுகுரலுக்கு அவர் ஏன் செவிசாய்க்கவில்லை என்றும் பிதற்றுகிறார்கள். ஆண்டவர் நமது நல்லாயன். அனைத்துத் துன்பத்திலிருந்தும் தமது மந்தையை அவர் கண்டிப்பாகப் பாதுகாப்பார். இதில் நம்பிக்கைக் கொள்ளாதோர் உயிர்த்த ஆண்டவருக்குச் சாட்சிகளாக விளங்க இயலாது.

இன்றைக்கு நாம் படும் துன்பங்கள், வேதனைகள், கவலைகள் எல்லாவற்றையும் அறிந்து அவற்றை போக்குகிறார் என்றால் அவர் நல்ல ஆயனாக இருக்கிறார் என்பதில் என்ன மாற்றுக் கருத்து இருக்கிறது?. எனவே அவர் நம்மை முழுமையாக அறிந்திருப்பதனால் நல்ல ஆயனாக இருக்கிறார் என அறுதியிட்டுச் சொல்லலாம்.

இதற்கு எடுத்துக்காடாக, இயேசு ஒரு நல்ல ஆயனைப் போன்று செயல்பட்டார் என்பதை நற்செய்தியில் வருகின்ற பல நிகழ்வுகள் நமக்கு எடுத்துக்கூறுகின்றன. மக்கள் ஆயனில்லா ஆடுகளைப் போன்று இருந்ததால் அவர்கள்மீது பரிவுகொண்டார் என்றும், அவர்களுக்குப் பலவற்றைப் போதித்து, மக்களிடமிருந்த நோயாளிகளைக் குணமாக்கினர் என்று நாம் வாசிக்கின்றோம் (மத் 14:14). அது மட்டுமல்லாமல், இயேசு மக்களின் அவல நிலையை கண்டு, தாமாகவேச் சென்று உதவி செய்தார் என்று நற்செய்தி நூல்கள் நமக்குச் சான்று பகர்கின்றன.

ஆனாலும், நல்லாயனின் மந்தையாகிய நாமும் பல நேரங்கில் உலக மாயக் கவர்ச்சிகளைக் கண்டு, அவற்றில் மயங்கி, நல்ல ஆயனை மறந்துவிடுகின்றோம். இந்த நிலை மாறவேண்டும்.

மேலும், மந்தைகளை மேய்க்க இன்று நமக்கு ஆயன்கள் தேவை. இதற்காக அறுவடையின் ஆண்டவரிடம் தவறாமல் இறைவேண்டல் செய்வதோடு, நமது குடும்பங்களில் இருந்தும் பல பணிகளை ஏற்று செயல்படுத்த பணியாளர்கள் உருவாக ஆண்டவரை இறைஞ்சி மன்றாடுவோம். ஆயனின் குரலுக்குச் செவிமடுத்து வாழ்வோம்

*-லூர்தம்மாள், காஜாங்*

**தவக்காலம் நான்காம் ஞாயிறு**

திப. 2: 14a, 36-41
திபா 23: 1-3a. 3b-4. 5. 6.
1பேதுரு 2: 2: 20b-25
யோவான் 10: 1-10 20b-25

**ஞாயிறு வாசகம்: ஆண்டு I**
**வாரநாள் முதல் வாசகம்: 2**
**திருப்புகழ் மாலை : வாரம் 4**